தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 17-8-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழகத்தில் 5 சதவிகித வேளாண் வளர்ச்சி – பட்டமளிப்பு விழாவில் துணைவேந்தர் பேச்சு

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக 36வது பட்டமளிப்பு விழாஇன்று (17-08-2015) பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா அரங்கில் நடைபெற்றது. பல்கலைக்கழக இணைவேந்தரும் வேளாண்துறை அமைச்சருமான திரு. வைத்திலிங்கம் அவர்கள் தலைமை தாங்கினார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் கு. ராமசாமி அவர்கள் வரவேற்று பல்கலைக்கழக சாதனைகளை விளக்கினார். இறவை விவசாயத்திலிருந்து மானாவாரி விவசாயத்தை நோக்கி வேளாண் ஆராய்ச்சி முடுக்கிவிடப்பட்டுள்ளது என்று கூறினார். 32 மாவட்டங்கள் வறட்சி மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டபோதும் 2011-12ம் ஆண்டு 103 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானியம் உற்பத்தி செய்து தமிழகம் சாதனை படைத்தது. தொடர்ந்து 2012-13ல் 112 லட்சம் மெட்ரிக் டன் என்றும் 2013-14ல் 128 லட்சம் மெட்ரிக் டன்னும் விளைவித்து கடந்த 26 ஆண்டுகளில் இல்லாத அளவு சதவிகித வளர்ச்சியை வேளாண்துறை எட்டியுள்ளது. தமிழக அரசு ஆராய்ச்சிக்காக தனியாக நிதி ஒதுக்க உள்ளதை சுட்டிக்காட்டிய துணைவேந்தர் அவர்கள் விளைபொருட்கள் தரம் சான்று திட்டத்திற்காக பரிசோதனைக்கூடம் அமையவுள்ளதைக் கூறினார். உலக வங்கி மூலம் மத்திய அரசும் ஆசிரியர், மாணவர் பயிற்சிக்காக 2,900 கோடி ரூபாய் நிதி ஒதுக்கவுள்ளதை எடுத்துரைத்தார்.

பின்னர் அமெரிக்க கார்னல் பல்கலைக்கழக பயிர் வளர்ப்பு மற்றும் மரபியல் துறை பேராசியர் முனைவர். சூசன் ஆர். மெக்கோச் அவர்கள், அமெரிக்காவைச் சேர்ந்த உலக உணவுத்திட்ட முன்னாள் ஐ.நா.உதவி பொது செயலாளர் மற்றும் இயக்குநர் முனைவர். பெட்ரோ மெட்ரானோ ரோஜாஸ் அவர்கள் மற்றும் கோயம்புத்தூர் கே.ஜி. தகவல் நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு. அசோக் பக்தவச்சலம் ஆகியோர்க்கு கௌரவ முனைவர் பட்டம் வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

முனைவர். சூசன் ஆர். மெக்கோச் அவர்கள் நெல்லில் உயிர் தொழில்நுட்பம் மூலம் மரபணுக்களில் ஆராய்ச்சி செய்து அதன் மூலம் பூச்சிக்கொல்லி பயன்பாடுகளைக் குறைத்து, சத்துக்கள் நிறைந்த நெல்மணிகளைக் கொண்ட பயிர் உருவாக்குதலில் ஆராய்ச்சி மேற்கொண்டுள்ளார். மேலும் தனது சிறப்பு உரையில் நம்மிடம் உள்ளதை பிறர்க்கு பகிர்ந்தளிப்பது தான் முன்னேற்றம் தரும். அறிவுலக பகிர்தல் மிகவும் அவசியம், மாணவர்கள் தாம் பெற்ற

பட்டங்களுக்கு பல்கலைக்கழகத்திற்கு பெருமை சேர்க்கும் வகையில் புதுமையான கண்டுபிடிப்புகளைக் கொடுக்கக்கூடிய ஆராய்ச்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கூறினார்.

முனைவர். பெட்ரோ மெட்ரானோ ரோஜாஸ் அவர்கள் பசியைப் போக்குவதில், வறுமை ஒழிப்பு ஐக்கிய நாடுகளின் உணவுத் திட்டம் மூலம் செயல்படுத்தியுள்ளார். காந்தியடிகளின் வார்த்தைகள் அவரை ஊக்கப்படுத்தியதாக கூறி, அவர் பசித்தவருக்கு உணவு தான் கடவுள் என்று உணர்ந்து பசியாற்ற தான் பாடுபட்டதாகக் கூறினார்.

கோயம்புத்தூர் கே.ஜி. தகவல் நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு. அசோக் பக்தவச்சலம் சூரிய ஒளி மற்றும் உயிரி சக்தி மூலம் கடல் நீரை குடிநீராக்கும் திட்டத்தை செயல்படுத்தி சர்வதேச அங்கீகாரம் பெற்றமைக்கு, தகவல் தொழில்நுட்பத்தில் தமிழ்நாட்டை உலக அளவில் பங்களிப்பு அளிக்க பாடுபட்டதைக் கூறினார். மறைந்ம மேதகு முன்னாள் குடியரசுத் தலைவர் ஆக்கமும் ஊக்கமும் கொடுத்ததாகவும் இளைஞர்கள் சிறு குறிக்கோள்களைக் கொண்டிருப்பது குற்றம் என்றும் பெரிய கனவு கண்டு வாழ்க்கையி போராட வேண்டும் என்றும் கூறினார்.

பின்னர், 33 மாணவர்களுக்கு தங்கப் பதக்கங்களும், 111 மாணவர்களுக்கு முனைவர் பட்டமும், 199 மாணவர்களுக்கு முதுநிலை பட்டமும், 827 மாணவர்களுக்கு இளநிலைப் பட்டங்களும் மொத்தமாக 1170 பேருக்கு பட்டங்கள் வழங்கப்பட்டு உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

அம்மா வேளாண் புதுமை படைப்பு திட்டம், வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் மதுரையிலும், முதுமுனைவர் பட்டப்படிப்பு பாரத் ரத்னா அப்துல் கலாம் பெயரிலும், வினய் ராய் விருது, ருக்மணி சின்னம்மாள் விருது, சி.வி. சிவக்குமார் விருது ஆகியவை புதிதாக அறிவிக்கப்பட்டன.

தமிழக அரசு மகளிர் தோட்டக்கலைக் கல்லூரிக்காக 40 கோடி, திருவண்ணாமலை, தஞ்சாவூர் மற்றும் குடுமியான்மலையில் வேளாண் கல்லூரிகளுக்கு 150 கோடி, திருவண்ணாமலை, தேனி, திருநெல்வேலியில், சிறுதானிய பயிர்கள், திராட்சை, சிட்ரஸ் ஆராய்ச்சி நிலையங்கள் அமைக்க உதவி ஆறு சிறப்பு ஆராய்ச்சி மையங்கள் திறன் மேம்பாட்டு மையம் அமைக்க குமுளூரில் 22 கோடியில் அரசுத் திட்டங்கள் என்று பல உதவி செய்துள்ளது. மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள், விரிவாக்க அலுவலர்கள், விவசாயப் பெருமக்கள் அனைவரும் உழைத்து இந்தியாவில் முதன்மையாக விளங்கும் இப்பல்கலைக்கழகம் உலகத் தரத்தை நோக்கி வெற்றிநடை போடுகிறது என்று கூறினார்.

தேசிய மாணவர் படை, நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள், அலுவலர்கள் ஆகியோர்கள் பங்குபெற்றனர். நாட்டுப் பண்ணுடன் விழா இனிதே நிறைவு பெற்றது.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்


TAMIL NADU
TAMIL NADU AGRICULTURAL UNIVERSITY
Coimbatore
Doctor of Science
Dr. Susan R. McCouch




Video Point
98422 33001


TAMIL NADU
TAMIL NADU AGRICULTURAL UNIVERSITY
Coimbatore
Doctor of Science
Shri Ashok Bakthavathsalam
K. ROSAIAH


வேளாண்மைப்
TAMIL NADU
TAMIL NADU AGRICULTURAL UNIVERSITY
Coimbatore
Doctor of Science
Dr. Pedro Medrano Rojas